**ரத்தொட்ட பிரதேச சபை**
**மாதளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 19 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தொட்ட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளினுள்ளும் மீளாய்வாண்டினுள்ளும் நிர்மானிக்கப்பட்டிருந்த 3 கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 36,269,045 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன செலவினம் ரூபா 208,422 மற்றும் சம்பளம் மீள் நிரப்புகைரூபா 1,786,645 உம் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) ரூபா 10,000,000 ஆன நிலையான வைப்புக்காக ஆண்டிற்கான ரூபா 200,000 ஆன வட்டி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக்காட்டப்பட்டது.

(ஈ) கடன் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் வெளியீட்டுக் கட்டளை குறிப்பு இல்லாததனால் ரூபா 3,058,938 ஆன களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி கூடுதலாக காட்டப்பட்டது.

(உ) பௌதீகரீதியாக நிலவாத 6 கட்டிடங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 634,455 உம் ரூபா 847,322 ஆன நூலகப் புத்தக மீதியொன்றும் கூடுதலாக காட்டப்பட்டது.

(ஊ) உகுவெல பிரதேச சபையினால் கிடைத்திருந்த ரூபா 128,429 பெறுமதியான 116 கெல்வனயிஸ் குழாய்கள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 38,655,887 ஆன 4 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அவைகளுக்கான துணைப் பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்கு இடையில் ரூபா 2,685,860 ஆன வித்தியாசம் நிலவியது.

(ஆ) மூலதன ஈடுபடுத்தலின் வருமானத்திற்கு பங்களிக்கும் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக்கணக்கின் மீதி இடையில் ரூபா 775,666 ஆன வித்தியாசம் நிலவியது.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

19 வருடங்களிலிருந்து அசைவின்றிமுன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,462 தொகையான தொங்கல்கணக்கின்மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,434,702 ஆனதுடன்,5 ஆண்டு காலத்தையும் விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 4,299,150 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,575,594 ஆனதுடன்,5 ஆண்டு காலத்தையும் விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 1,879,963 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 123,803,288 ஆன 7 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.7 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 24 (3) 1 பிரிவு | முறையாக தயாரிக்கப்பட்டுகளஞ்சியப் பதிவிடப்பட்ட பாதைகள் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி ஒளுங்குகள் | |
| | (i) விதி 203 | சபைக்கு சொந்தமான களஞ்சிய பண்டங்கள், பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிக்க வில்லை. |
| | (ii) விதி 218 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக 1987 முதல் மெய்மையாய்வு செய்யப்பட்டிக்க வில்லை. |
| (இ) | சுற்றிக்கைகள் மற்றும் ஏனையவை | |
| | (i) மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி. | 5 வருடங்களுக்கு ஒரு முறை கடையறை குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 1986 ஜுன் 17 திகதிய இலக்கம் 1986/ 6 கொண்ட உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கை. | - சபை மக்கள் வங்கிக்கு வழங்கிய காணித் துண்டு 50 வருட காலத்திற்காக நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

- 2009 ஆண்டிலிருந்து சரியான மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்ளாது ரூபா 8,000 ஆன மாதாந்த குத்தகை வாடகை அறவிடப்படுகின்றது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 16,758,888 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,254,378 ஆனது. முன்னைய ஆண்டுடன்ஒப்பிடுகையில்மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,504,510 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு 2 வருமான விடயங்களில் ரூபா 4,308,443 ஆன வருமானஅதிகரிப்பு மற்றும் 2 செலவின விடயங்களில்ரூபா 2,104,978 செலவின குறைவு தாக்கம் விளைவித்திருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீத வரி**

(அ) ரூபா 761,564 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 1 முதல் 5 ஆண்டு காலத்தை விஞ்சிய ரூபா 729,332 ஆன மீதி உள்ளடங்கியிருந்ததுடன் ஒழுங்காக சொத்துக்கள் இனங்காணாமையினால் 2012 ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற அறவிடப்பட முடியாத ரூபா 193,255 ஆன வீதவரி தொகையொன்று நிலவியது.

(ஆ) நீண்ட கால நிலுவை வீத வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 108,273 ஆன தொகை காட்டப்பட்ட போதிலும் அக் கட்டிடங்கள் பௌதீகரீதியாக இனங்காணப்படாததுடன், மதிப்பீட்டிற்கு உள்ளாகாத 14 சொத்துக்களுக்குறிய நிகவெல்ல பாதை வீடுகளின் அறவிட வேண்டிய ரூபா 264,745 ஆன வீதவரி மீதியொன்றும் அறவிட முடியாத நிலைமையில் நிலவியது.

**2.3.2 வாடகை**

(அ) நிலுவைகுத்தகை வாடகை மீதி ரூபா 761,470 ஆனதுடன் 2017 ஜுன் 14 வரையும் அவற்றில் ரூபா 285,538 ஆன மீதி அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமில்லாத காணியின் சபைக்காக ரீப் கருத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்டு வழங்கியிருந்த 5 கடையறைகளை கொண்ட வளவை நிர்மானித்து 6 வருடங்களுக்கு அன்மித்த காலமொன்று கழிந்தும் சபையின் பெயருக்கு சுவீகரிக்கப்படாததன் காரணத்தால் மீண்டும் பிரதேச செயளாலருக்கு ஒப்படைத்து கடையறைகளை அகற்றுவது இடம்பெற்றிருந்ததுடன், 2016 ஆகஸ்ட் முதல் சபைக்கு கிடைத்த கடையறை வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2006 ஆண்டின் பொலிஸிக்கு பெற்றுக்கொடுத்திருந்த பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பொலிஸ் நிருவப்பட்டிக்கும் கட்டிடம் என்பன மதிப்பிடப்படாமல் 2006 ஆண்டின் தீர்மானிக்கப்பட்ட முறையே ரூபா 650 உம் மற்றும் ரூபா 3,500 உம் ஆன மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி ரூபா 405,685 ஆனதுடன் அது 5 ஆண்டுகளுக்கு முன்னிருந்து நிலவிய மீதியானது.

**2.3.4 ஏனைய வருமானம்**

**(அ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 349,673 ஆனதுடன் அம் மீதிக்கு 1 முதல் 5 வருடம் இடையிலான காலத்தை விஞ்சிய ரூபா 327,813 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

**(ஆ) நீர்க் கட்டணம்**

(i) மீளாய்வாண்டின் பற்றுச்சீட்டிடல் ரூபா 7,211,011 தொகையில் ஆண்டினுள் ரூபா 1,957,875 ஆன தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அவை பற்றுச்சீட்டிடலின் 27 சதவீதமான அளவானது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை நிர்க் கட்டணம் மீதி ரூபா 6,624,398 ஆன கூடிய பெருமானத்தை கொண்டது.

(ii) 3458 நீர் பாவனையாளர்களிடமிருந்து நீர் மாணி பொருத்தப்படாமல் நிலையான மாதாந்த கட்டணமொன்று அறவிடப்பட்டுக்கொண்டிருந்தது.

**2.3.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 843,000மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 10,916,723 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது.

**2.4 மிகை அறவிடல்**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவிடல்களுக்காக ரூபா 9,543,067 தொகை அறவிட வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

(அ) புரநெகும கருத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட வாராந்தச் சந்தை கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டில் பாதீட்டு கொள்கை அறிக்கையில் காட்டப்பட்டிருந்த குருவாவ சிறுவர் பூங்கா பூமியை ஒழுங்குசெய்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** இடமாற்றம்பெற்று சென்ற, ஓய்வுப் பெற்ற, சேவையை கைவிட்டுச் சென்ற, இறந்த அலுவலர்களில் கடன் மீதியான ரூபா 522,195 ஆன தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 2000 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை காலத்திற்கான ரூபா 2,624,047 ஆன கடன்பட்டோர் மீதி, 1999 முதல் 2013 ஆண்டு வரை காலத்திற்கான ரூபா 406,131 ஆன மீள் அழிக்கப்படாத முற்பண மீதி மற்றும் 2006 முதல் 2014 வரை

காலத்திற்கான ரூபா 8,911,692 ஆன கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)** 14மிகை தொழிலாளர்கள் இருந்த போதிலும் நாட்சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தும் அடிப்படையில் 4 ஊழியர்களை ஈடுபடுத்தி ரூபா 1,180,371 செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ)** நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரித்து நாளாதுவரையாக நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 11 நீர் கருத்திட்டங்கள் நிலவியதுடன் நீரை சுத்தம் செய்யாது தாங்கிகளிலிருந்து விநியோகிக்கப்பட்ட காரணத்தால் இலைகள் சருகுகள் குழாய்களில் அடைபடுவதனால் நீர் விநியோகிக்கப்பட தடைகள் ஏற்பட்டிக்கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளினுள் பெறப்பட்டிருந்த 356 கட்டிட விண்ணப்பப்பத்திரங்களின் 241 விண்ணப்பப்பத்திரங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் 12 விண்ணப்பப்பத்திரங்களுக்கு மாத்திரம்இனங்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாவினைக்கு எடுக்க முடியாத நிலைமையில் நிலவிய ரூபா 1,615,975 பெறுமதியான 9 வாகனங்கள் மற்றும் பாவினையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 213,000 பெறுமதியான 2 பிரதி எடுக்கும் இயந்திரங்கள் ரூபா 159,000 பெறுமதியான 2 அச்சு இயந்திரங்கள் மற்றும் ரூபா 106,000 பெறுமதியான ரோனியோ இயந்திரம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 228,643 பெறுமதியான நீர் உபகரணங்கள், 2014 ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 848,250 பெறுமதியான சிறுவர் பூங்கா உபகரணங்கள் மற்றும் 2014 ஆண்டின் ரூபா 12,064,929 செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தை கட்டிடம் விளைவற்றதாக நிலவியது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நவம்பர் 12 திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 யிற்கு முரணாக கொடுப்பனவு மீது 8 ஊழியர்களுக்கு நிரந்தரமான நியமனங்கள் வழங்கப்பட்டு பின்னர் நியமனங்களை இரத்துச்செய்யப்பட்டிருந்தன. அதன் காரணமாக தொடரப்புடைய ஊழியர்கள் சபைக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குக்காக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 325,000 ஆன வழக்கறிஞர் கட்டணம் உரிய ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளாமை மற்றும் சுற்றறிக்கைக்கு மாற்றமாக நடவடிக்கை எடுக்கப்பட்டததனால் சபைக்கு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்த பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) தனியார் தரப்பினர் ஒருவரின் காணியின் பாதையொன்று வெட்டப்பட்டிருந்தமை மற்றும் 2009 ஆண்டின் சபையின் பாதையாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் காரணமாக அத் தரப்பினரால் 2010 ஆண்டின் மாதளை மாவட்ட நீதி மண்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 2010 ஆண்டு முதல் 2016 வரை வழக்குக் கட்டணமாக ரூபா 115,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இடுகாடொன்றின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சபையின் இல்லாமையினால் தனியார் வதிவாலர் ஒருவர் காணியின் ஓர்பகுதியை பிடித்துக்கொன்டு இருந்ததுடன் அதன் காரணமான வழக்குக்காக வழக்கரிஞர் கட்டணமாக 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 76,500 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை நிதியத்தினால் 2015 ஆண்டின் குருவாவ சிறுவர் பூங்கா நிர்மானிப்பதற்காக ரூபா 765,000 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பாதீட்டினால் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் முறையான அனுமதியின்றி வளவை தயார்செய்வதற்காக ரூபா 330,400 செலுத்திருந்ததுடன், மீளாய்வாண்டில் தொடர்ப்புடைய காணி காடாகியிருந்தது.

(ஆ) பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 500,000 ஆன தொகை செலவிடப்பட்டு நீர் கருத்திட்டங்களுக்கு தினத்தோறும் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவைக்குள் கொள்வனவு செய்வதன் தேவை அரியப்படாதருபா 327,575 பெறுமதியான நீர் உபகரணங்கள் கானப்பட்டன.

### 3.7 கருத்திட்டங்கள் தாமதித்தல்

பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டின் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுத் தொகை ரூபா 3,250,000 ஆன 6 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லாததுடன், 2016 ஜுன் வரை பெற்ற ரூபா 1,000,000 ஆன முற்கொடுப்பணத்தின் ரூபா 500,000 ஆன நீர் உத்தேசத்திட்டங்களளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலுக்கான கருத்திட்டம் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 3.8 கழிவு பொருள் முகாமைத்துவம்

சபைக்கு சொந்தமான ரூபா 2,971,053 செலுத்தி நிர்மானிக்கப்பட்ட கழிவு பொருள் முகாமைத்துவக் கட்டிடமொன்று இருந்ததுடன் அதிகாரப் பிரதேசத்தின் தினத்தோறும் சேர்க்கப்படும் 2 மெற்றிக் டொன் அளவான கழிவு பொருட்களைக்கொன்டு பசளை 10 கிலோ கிறாம் அளவு உற்பத்திச்செய்யப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 9 வருமான விடயங்களில்58 சதவீதம முதல் 88 சதவீதம் வரைவீச்சளவின்அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம்ஈட்டப்பட்டிருக்கவில்லாததுடன்,இன்னும் 11 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி62 சதவீதம முதல் 4767 சதவீதம் வரை் வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(ஆ)** 11 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,540,864 ஆன ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்ததுடன்,17 செலவின விடயங்கள் தொடர்பாக தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையில் 55 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(இ)** மீளாய்வாண்டினுல் பாதீட்டு திருத்ததிற்கு உள்ளாக்கியதன் பின்னரும்,பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளை இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதியின் 5(7) விதி பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தல்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு நிருவப்படுவதற்கு நடவடிகக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரகட்டுப்பாடு.
(ஆ) பதவியணியினர்முகாமைத்துவம்.
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) பாதீடு கட்டுப்பாடு.